**CC..No.201/2020**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026**

**அ.சா. –1**

**பெயர் – சத்தியா (38) க/பெ. பழனிச்சாமி, கனக்கன் குப்பம்,**

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் அந்த வகையில் அவரை தெரியும். நான் வீடு கட்டியபோது எதிரியிடம் இருந்து பணம் எதுவும் பெறவில்லை. நான் வாங்கிய கடனுக்காக அவருக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. நான் எதிரியிடம் இருந்து ரூ.10,00,000/–க்கு மேல் கடனாக பெற்றுள்ளேன் என்றாலும், அதனை தற்போது வரை திரும்ப செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல, நான் அவரிடம் இருந்து எப்போதும் பணம் வாங்கியது கிடையாது. எனக்கும் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. அது தொடர்பாக சண்டை வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது கணவர் வெளியூரில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனவே அவர் மாதம் ஒரு முறை தான் வீட்டிற்கு வந்து செல்வார் என்றாலும் அவர் வீட்டில் இல்லாத போது எதிரி என்னிடம் அவரது ஆசைக்கு இனங்கி இருக்குமாறு கேட்டதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் அது தொடர்பாக நான் கண்டாச்சி புரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் எதிரி அங்கு வந்து மீண்டும் இதுபோன்ற தவறு செய்ய மாட்டேன் என்று கூறியதால் அந்த புகாரை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். மேற்படி புகார் நகலை வைத்துள்ளேனா என்றால் எதிரி எழுதி கொடுத்த ஆவணத்தையும் வைத்துள்ளேன். இவ்வழக்கு விசாரணையின்போது மேற்படி புகாரின் நகலை காவலர்களிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

3. எனது வீட்டின் கதவை இரவு வேலையில் ஆஜர் எதிரி தட்டியதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் அது தொடர்பாக நான் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அன்றைய தினம் யார் வந்தார்கள் என்பது கூட எனக்கு தெரியாது என்றாலும் ஆனால் பொறாமையின் பேரில் எதிரி மீது பொய் குற்றச்சாட்டு கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை நான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி விவரத்தை நான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

4. புகார் வாக்குமூலத்தில் ஒரு வகையான சங்கதிகளையும் முதல் விசாரணையில் ஒரு வகையான சந்திகளையும் குறிப்பிட்டுளேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் விசாரணையில் ஒரே சங்கதிகளை குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. கனக்கன் குப்பத்தில் இருந்து தேவதானம்பேட்டையில் உள்ள வனதுர்க்கையம்மன்கோவில் இடையே சுமார் 2 கிமீ துாரம்இருக்கும். மேற்படி கோவிலுக்கு சம்பவத்தின்போது மண் பாதை வழியாகத்தான் செல்ல இயலும் என்றால் சரிதான். மேற்படி 2 கிமீ துாரத்தில் குறிப்பாக எந்த இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் செல்லும் வழியில் பாழடைந்த மண்டபம் ஒன்று உள்ளது அங்கு தான் நடைபெற்றது. மேற்படி விவரத்தை நான் புகார் வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் அப்போது என்னிடம் குறிப்பாக இடத்தை பற்றி கேட்கவில்லை, எனவே நான் கூறவில்லை.

5. சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் நானும், எனது இரண்டு பிள்ளைகள் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு நடந்து சென்றோம். எதிரி மேற்படி சாலையில் யாருடை நிலத்திற்கு அருகே குறுக்கே வந்தார் என்ற விவரத்தை நான் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் அந்த விவரத்தை என்னிடம் கேட்காத காரணத்தினால் நான் கூறவில்லை. எதிரி எனது மகனின் உடலின் எந்த பாகத்தில் வைத்து கொலை செய்துவிடுவதாக முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் கழுத்தில் வைத்து மிரட்டினார். எனது இரு மகன்களில் எந்த மகனின் கழுத்தில் கத்தியை வைத்தார் என்ற விவரத்தை முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த விவரத்தை கேட்காததால் நான் குறிப்பிடவில்லை.

6. நான் முதல் விசாரணையில் எதிரிஎன் சேலையை பிடித்து இழுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் அந்த விவரத்தை புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் செல்வது தவறு என்றாலும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி எனது வலது மற்றும் இடது ஆகிய இரண்டு கைகளில் வெட்டியதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் குறிப்பாக கையின் எந்த பகுதியில் வெட்டினேன் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் அந்த விவரத்தை காவலர்கள் குறிப்பாக என்னிடம் கேட்காத காரணத்தினால் கையில் வெட்டியதாக குறிப்பிட்டுள்ளேன்.

7. நான் சிகிச்சைக்காக செஞ்சி அரசு மருத்துவமனைக்கும் அதன் பின்னிட்டும் ஜிப்மர் மருத்துவமனைக்கும் சென்றேன். செஞ்சி அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் வழக்கு சம்பவம் எந்த தேதியில்

நடைபெற்றது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் கத்தி மற்றும் அருவா ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக குறிப்பிட்டுளேன் என்றால் நான் மருத்துவரிடம் கொடுவா கத்தியால் தாக்கியதாக கூறினேன். அதற்கு அவர் அந்த ஆயுதம் என்றால் எது என்று கேட்டார், அவருக்கு புரியாத காரணத்தினால் அதனை விளக்க வேண்டி கத்தி, அருவா என்று கூறினேன். நான் கூறிய ஆயுதத்தை மருத்துவர் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கொடுவா கத்தி, கத்தி, அருவா ஆகிய மூன்றும் வெவ்வேறு ஆயுதங்கள் என்றால் சரிதான். ஆனால் அது மருத்துவருக்கு தெரியவில்லை.

8. நான் மருத்துவரிடம் துர்க்கையம்மன் கோவில் தெரு அருகே வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. புகார் வாக்குமூலத்தில் எனக்கு இரண்டு காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் மருத்துவர் எனக்கு மூன்று காயங்கள் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு 3 காயங்கள் தான் ஏற்பட்டது. அதனை நான் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளேன். கொடுவா கத்தி அல்லது கத்தியால் வெட்டினால் கிழிந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

9. எனக்கு கட்டை விரலில் காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அந்த விவரத்தை மருத்துவரிடம் கூறினேனா என்றால் நினைவில் இல்லை. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளதுபோல் எனக்கு கையில் காயம் ஏற்படவில்லை என்றாலும், அதன் விளைவாக எனக்கு கையில் கட்டு போடப்பட்டிருந்ததால், நான் புகார் வாக்குமூலத்தில் கை ரேகை வைத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாரும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது அல்ல என்றாலும் சரியல்ல.

10. வலதுகையிலும், இடது முழங்கையிலும் சுமார் 17 தையல்கள் மற்றும் 12 தையல்கள் போடப்பட்டதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் அந்த விவரத்தை நான் காவலர்களிடமும் புகார் வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இடது முழங்கையில் காயம் ஏற்பட்ட விவரத்தை நான் முதல் விசாரணயில் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் காவலர்கள் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். எனது மருத்துவ ஆவணங்களான X ray and Scan report ஆகியவற்றை நான் காவலர்களிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

11. எதிரி தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதத்தை நான் காவலர்களிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 03.05.2019 அன்று நான் மருத்துவமனையில் இருந்தபோது காவலர்களிடம் புகார் வாக்குமூலம்

அளித்தேன். இந்த தேதியை தவிர வேறு தேதியில் நான் புகார் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் காவலர்களால் 03.05.2019 அன்று எழுதப்பட்டது. எதிரி மீது எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை காவலர்கள் என்னிடம் குறிப்பிடவில்லை.

12. நான் எதிரியிடம் பெற்ற பணத்தை ஏமாற்ற வேண்டி திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், இந்நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தொடுத்து எதிரியை அலைக்கழிக்கிறேன் என்றால் சரியல்ல சம்பவத்தன்று நான் கோவிலுக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றேன் என்றாலும், அப்போது நான் மலைப்பாதையில் தாமாக கீழே விழுந்து அதன் விளைவாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் கண்ணுற்ற சாட்சிகள் இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை மருத்துவமனையில் வைத்து 03.05.2019 அன்று விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.